மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்மந்தமில்லை; எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றுப் பாலம்

* 428 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். கிட்டப்பா: அந்த பாலம் மிகவும் குறுகலாகவும், பழுது அடைந்திருப்பதாலும், மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலபடுத்த ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறுர்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலம் மாயூரம் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. எனவே, இதை அகலப்படுத்த வேண்டு மென்றால், அந்த நகராட்சி செலவிலே ஒரு பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அந்த மாயூரம் நகராட்சி தன்னுடைய பங்கை ஏற்றுக்கொள்ள இசைவு தெரிவித்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு யோசனை செய்யும்.

பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம்

* 429 வினு—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தென்னுற்காடு மாவட்டம், பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அந்த இடத்திலே பாலம் கட்டப்படவிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த நல்ல காரியத்தை எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த பாலம் கட்டுவதற்கு 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. இதிலே மத்திய அரசாங்கத்தின் அனுமதியையும் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய உதவியையும், அனுமதியையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.